**செய்தி வெளியீடு எண்:363** **நாள்: 09.06.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (9.6.2017) புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியை துவக்கி வைத்து, கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி
அம்மா அவர்களின் ஆசியோடு
இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர்
முனைவர் **மு.தம்பிதுரை** அவர்களே,
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் **சி.விஜயபாஸ்கர்** அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
விழாவில் வரவேற்புரையாற்றியுள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர்
டாக்டர் **ஜெ.ராதாகிருஷ்ணன்** அவர்களே,
திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர்,
திரு.**ப.குமார்** அவர்களே,

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்,

திரு.**எ.அன்வர்ராஜா** அவர்களே,

சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர்,

திரு.**பி.ஆர்.செந்தில்நாதன்** அவர்களே,

அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,

திரு.**இ.எ.இரத்தினசபாபதி** அவர்களே,

கந்தர்வகோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,

திரு.**பா.ஆறுமுகம்** அவர்களே,

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்

திரு.**பி.கே.வைரமுத்து** அவர்களே,

நன்றியுரை நிகழ்த்தவுள்ள புதுக்கோட்டை மாவட்ட

ஆட்சித்தலைவர்

திரு.**சு. கணேஷ்** அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின்பால்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு

எப்பொழுதும் அளவு கடந்த அன்பும், பாசமும் உண்டு.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரியாசனம்
செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்தாலும்
அவர்களின் எண்ணம்
புதுக்கோட்டையின் வளர்ச்சியைச் சுற்றியே இருந்தது.
அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால்
புதுக்கோட்டையின் வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும்

புதுக்கோட்டை மாவட்டத்தை
கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து
19ஆம் நூற்றாண்டு வரை
பாண்டியர்களும், சோழர்களும்,
மதுரை நாயக்கர்களும்
தொண்டைமான் மன்னர்களும் ஆட்சி செய்தார்கள்.

பல மன்னர்கள்
பல காலகட்டங்களில் டெல்லி செங்கோட்டையை
ஆண்டது போல.. புதுக்கோட்டையையும்
பல மன்னர்கள் ஆண்டுள்ளார்கள்.

அதனால்தான் இம்மாவட்டத்தில்

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட
பல நினைவுச் சின்னங்கள் கிடைத்திருக்கின்றன.
சுமார் 1200 கல்வெட்டுகள்
பல குடவரைக் கோயில்கள்
புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள
38 பாரம்பரியமிக்க இடங்களில்
இம்மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலும் ஒன்று.
புதுக்கோட்டை மாவட்டத்தின்
புகழை பறைசாற்ற சித்தன்னவாசல் ஓவியங்கள் மட்டுமே போதும்.

ஆன்மீக திருக்கோயில்களையும்
அழகான சுற்றுலா இடங்களையும்
அதிகமாக கொண்டது இம்மாவட்டம்.

கர்நாடக சங்கீத விதிகளை விளக்குகின்ற
கல்வெட்டு இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

அருணகிரிநாதரால் பாடல் பெற்ற
விராலிமலையை உள்ளடக்கியது இந்த மாவட்டம்.

இங்குள்ள பழம் பெருமை மிக்க நார்த்தா மலை சிவன் கோயில்
இப்போதும் பன்னாட்டு பக்தர்களை ஈர்த்து வருகிறது.

மாணிக்கவாசகர் வரலாற்றோடு தொடர்புடைய
திருப்பெருந்துறை ஆவுடையார்கோவில்
இந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது.
இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவில்
முஸ்லீம்  பெரியவர் ஒருவரின் சமாதியில்
சந்தனகூடுவிழா நடத்துவதின் மூலம்
சமய நல்லிணக்கத்திற்கு இம்மாவட்டம்
இப்போதும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

எல்லையூர் பூதபாண்டி,  ஆவூர் மூலங்கிழார்,
மாடலன் மதுரைக் குமரன் போன்ற
சங்ககால பெரும்புலவர்கள்
புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்து
தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம்
தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கியத்திலும்

முக்கிய இடத்தைப் பிடித்த

ஒரு பெருமைக்குரிய மாவட்டம்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் புதுக்கோட்டையில் பிறந்து, சாதித்து வரலாற்று பக்கங்களில் இடம் பிடித்தவர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் தமிழகத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர். இப்பெருமைக்குரிய புதுக்கோட்டை நகரின் புதிய மருத்துவமனை திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

25.08.2015 அன்று சட்டமன்றப் பேரவையில்,

பேரவை விதி எண் 110–ன் கீழ்

**புதுக்கோட்டை**யில் ஒரு **புதிய அரசு மருத்துவக் கல்லூரி**

தொடங்கப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க,

புதுக்கோட்டையில்

231 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

புதிய மருத்துவக் கல்லூரியை உருவாக்கி

அதை இன்று தொடங்கி வைக்கும்

அரிய வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன் .

இம்மருத்துவக் கல்லூரியில்

இயல் கூடம், விரிவுரை அரங்கம்,

நூலகம், கூட்ட அரங்கம்,

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிகள்,

சிறப்பாக கட்டப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி,

700 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை,

புறநோயாளிகள் பிரிவு,

நிர்வாக பிரிவு, நவீன சமையல் கூடம்

போன்ற பல வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி,

**நமது மாநிலத்தில்**

22–வது அரசு மருத்துவக் கல்லூரியாக செயல்படும்.

ஏழை எளிய மக்களுக்கு

தங்கு தடையின்றி சுகாதார சேவைகள்

வழங்கப்பட வேண்டும் என்பதே

மறைந்த மாண்புமிகு அம்மா அவர்கள்

வழியில் செயல்படும்

அம்மாவின் அரசின் உயர்ந்த குறிக்கோளாகும்.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில்

படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகள்
தொடங்கப்பட வேண்டும் என்பது
இந்த அரசின் கொள்கையாகும்.

இதன்படி, சிவகங்கை, திருவண்ணாமலை,
சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம்
மற்றும் கோயம்புத்தூர்
தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை
ஆகிய நான்கு இடங்களில்
தலா 100 மருத்துவ மாணவர்கள் சேர்க்கையுடன்,
நான்கு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்
தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆறு ஆண்டு காலத்தில்,
எப்பொழும் இல்லாத அளவிற்கு,
தமிழ்நாட்டில் **கூடுதலாக** 1000 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்களை
இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.
அதுமட்டுமல்லாமல்,
அரசு மருத்துவக் கல்லூரிகளில்
403 முதுநிலை பட்ட மேற்படிப்பு இடங்கள்
அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்த ஆண்டு மட்டும் **305** இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசு உயர்நிலை மருத்துவமனைகளின்
கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக
இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு
**1,489** கோடியே **33** இலட்சம் ரூபாய்
நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

மேலும், **212 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்**
**175** கோடி ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
இந்திய நாட்டிலேயே முதன்முதலாக,
மாநிலத்தில் சுகாதாரத் துறைக்கென
தனியாக **மருத்துவப் பணிகள்**
**தேர்வு வாரியம்** அமைக்கப்பட்டுள்ளது.
இதுவரை **8** ஆயிரத்து **692** மருத்துவர்கள்,
**9** ஆயிரத்து **190** செவிலியர்கள் உட்பட
**20** ஆயிரத்து **852** பணியாளர்கள்
தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்** கீழ்,

கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படும்

நிதி உதவி 12,000 ரூபாயிலிருந்து

18,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் வாயிலாக

இதுவரை 3,687 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில்,

39 இலட்சத்து 59 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

கிராமப்புற வளர் இளம் பெண்கள்,

பெண் சிறைக் கைதிகள்,

அரசு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெறும்

பெண் நோயாளிகள்

ஆகியோருக்கு **விலையில்லா 'சானிட்டரி நாப்கின்'**

கடந்த ஆறு ஆண்டுகளில்

330 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களால் புதியதாக

"அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்" என்ற

திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு

இது வரை, 9.34 இலட்சம் தாய்மார்களுக்கு

அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அது போன்று, **அம்மா ஆரோக்கிய திட்டம்**
என்ற புதிய திட்டம் 03.03.2016 அன்று தொடங்கப்பட்டு,
மே, 2017 வரை
20 இலட்சத்து 89 ஆயிரத்து 159 நபர்களுக்கு
பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள்
வழங்கப்படவேண்டும் என்பதற்காகவும்,
அனைவருக்கும் சுகாதார வசதி
கிடைக்க வேண்டும் என்பதற்காகவும்
**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**,
மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு
சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.58 கோடி குடும்பங்களுக்கு
அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
அரசு மருத்துவமனைகள் உட்பட
751 மருத்துவமனைகள் சிகிச்சை அளித்து வருகின்றன.

சிறப்பு சிகிச்சைகளுக்கு

தற்போது வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை
1.5 இலட்சம் ரூபாயிலிருந்து
இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
இதுவரை, 19 இலட்சத்து 4 ஆயிரம் நபர்களுக்கு
3 ஆயிரத்து 969 கோடி ரூபாய் செலவில்
மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஆரோக்கியத்தை கண்டறிய
**அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்**
முன்னோடித் திட்டமாக
சென்னை அரசு மருத்துவமனையில்
01.03.2016 அன்று தொடங்கப்பட்டது.
மகளிருக்கு என்று தனியாக
**அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம்**
தொடங்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தில் இதுவரை 15,997 நபர்கள்
பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

சுகாதாரத்தில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக்கிய பெருமை
புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.
மாண்புமிகு அம்மா அவர்கள் 2001ஆம் ஆண்டு

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்
அமைக்கும் உன்னத திட்டத்தினை
இந்தியாவிற்கே அறிமுகப்படுத்தினார்கள்.

இதன்மூலம் ஊரக சுகாதார புரட்சிக்கு
மாண்புமிகு அம்மா அவர்கள் வித்திட்டார்.

நாட்டில் சுகாதாரமான சூழ்நிலையை
2003ஆம் ஆண்டு அம்மா அவர்கள்
"தூய்மையான கிராம இயக்கம்" என்ற
ஒரு மகத்தான திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

அம்மா அவர்களின் நோக்கம் வெற்றியடைய
நாம், நம்முடைய கிராமத்தையும், நகரத்தையும்
தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று
அன்பாக வேண்டிக் கொள்கிறேன்.

**நீட் தேர்வை** அறிமுகப்படுத்துவது,
மாநிலத்தின் உரிமையை மீறும் செயலாகும்.
கிராமப்புற மாணவர்களும்,
வறிய சமூக பொருளாதார அமைப்பிலிருந்து
வரும் மாணவர்களும் பொது நுழைவுத் தேர்வில்

நகர்புற மாணவர்களுடன் போட்டி போட முடியாது;
மேலும் நகர்புற மாணவர்களுக்கு உதவும் வகையில்
இந்த தேர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்களுக்கு
நகர்புற மாணவர்களைப் போல்
போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும்,
பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் வாய்ப்பினை
கிராமப்புற இளைஞர்கள் பெறமுடியாமல் இருப்பதாலும்,
அது அவர்களுக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தும்.

தமிழ்நாடு அரசு மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு
பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்தால்
சமூக பொருளாதார நிலையில்
பின்தங்கியிருந்த பெருவாரியான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இதனால் பொது நுழைவுத் தேர்வை
தொடர்ந்து தமிழ்நாடு அரசு எதிர்த்து வருகிறது.
'நீட்'-லிருந்து தமிழகத்திற்கு நிரந்தர
விலக்கு அளிக்குமாறு பாரதப் பிரதமர் அவர்களை கோரியுள்ளேன்.
மாநிலத்தில் மருத்துவம் மற்றும்

பல் மருத்துவக் கல்லூரிகளில்
தற்போதுள்ள நியாயமான மற்றும்
வெளிப்படையான மாணவர்கள் சேர்க்கை முறையை
தொடரும் பொருட்டு,
மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள
இரண்டு சட்ட வரைவுகளுக்கும்
விரைவாக ஒப்புதல் அளிக்கும்படி
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இந்த நேரத்தில்
பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 27.2.2017 அன்று
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும்
மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர்
அவர்களையும் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளேன்.
நல்ல தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

பண்டைய மன்னர்களின்
குடிமராமத்துத் திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்து
நீர்நிலைகளை பராமரிக்கும் விதமாக
ஏரி, குளங்களை தூர்வாரும் பணியை நான்
காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தேன்.

வண்டல் மண்ணை கட்டணமில்லாமல் எடுத்து
விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலங்களுக்கு
பயன்படுத்திக் கொள்ளலாம் என்றேன்.
இன்று தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்துப்பணிகள்

400 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
மக்கள் விவசாயிகள் பங்களிப்புடன் சிறப்பாக நடந்து வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை
192 பணிகள், 13 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில்
நடைபெற்று வருகின்றன.
அதன் விளைவாக வருகிற பருவமழையில்,
நீர் வீணாகாமல் சேமிக்கப்பட்டு
மக்களின் தேவையை பூர்த்தி செய்யும்
என்று நம்புகின்றேன்.

இதனால் விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் உயரும். இதனால்
தேவையான நீர் கிடைத்து விவசாய பெருகுடிமக்கள்
பயன்பெறுவார்கள் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் 1974ஆம் ஆண்டு
புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால்,
1912ஆம் ஆண்டே புதுக்கோட்டை நகராட்சி
உருவாக்கப்பட்டு விட்டது.

2012ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் போது
புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டுகள்
நிறைவு செய்திருந்தது.
அதனை நினைவு கூரும் வகையில்

மாண்புமிகு அம்மா அவர்கள்
புதுக்கோட்டை நகராட்சியின்
அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக
தாயுள்ளத்தோடு 50 கோடி ரூபாய் மாண்புமிகு இதயதெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்
குடுமியான்மலையில் 50 கோடி ரூபாய் செலவில்
வேளாண்மைக்கல்லூரி தொடங்கப்பட்டு
கடந்த நான்கு ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

அதில் 174 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள்.
617 கோடியே 2 லட்சம் ரூபாய் செலவில்
3517 குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில்
காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள்
இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் விரைவில் முடிவுற்று 10 லட்சம்
இம்மாவட்டத்திலுள்ள மக்களின்
பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
கந்தர்வ கோட்டையில், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
2014ஆம் ஆண்டு அரசு பாலிடெக்னிக் தொடங்கப்பட்டு
650 மாணவர்கள் இன்றைக்கு பயன் பெறுகின்றனர்.

விராலிமலையில், 2015ஆம் ஆண்டு ஐ.டி.ஐ. தொடங்கப்பட்டு வருடத்திற்கு 192 மாணவர்கள் பலனடைந்து வருகிறார்கள்.
மேலும், கந்தர்வ கோட்டை வட்டத்தில்
மருதகோன் விடுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு
800 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதே போல், ஆவுடையார்கோயிலிலும்
2 கோடி ரூபாயில் அரசு கலை மற்றம் அறிவியல் கல்லூரி
தொடங்கப்பட்டு 800 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.
இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை
மாண்புமிகு அம்மாவின் அரசு
புதுக்கோட்டை மாவட்டத்திற்காக
தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வறட்சியிலிருந்து மக்களை காப்பாற்றுவதையே
தலையாயக் கடமையாகக் கொண்டு
இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
அரசு உழைத்து வருகிறது.
எங்களுக்கு அம்மா சொன்ன தாரக மந்திரம்

அதிகமாக பேசாதீர்கள்!

அதிகமாக செயல்படுங்கள்!

உங்கள் எண்ணம் முழுவதும்

மக்கள் பணியாகவே இருக்க வேண்டும், என்றார்கள்!

எங்களைப் பொறுத்தவரை,

மக்கள் பணிதான் முக்கியம்.

அம்மா வழியில் நாங்கள் ஒத்த கருத்தோடு,

ஒருமித்த எண்ணத்தோடு அயராது உழைப்போம்

என்று இந்த நேரத்தில் உறுதிகூற கடமைப் பட்டிருக்கிறேன்.

நிறைவாக ஒரு கதையைக் கூறி

என் உரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

ஒரு காட்டில்  ஓநாயும், நரியும் நண்பர்கள்

அவை இரை ஒன்றும் கிடைக்காமல்

அலைந்து திரிந்து கொண்டிருந்தன.

மனவிரக்தியில் தனித்து வாழ்ந்து கொண்டிருந்த

ஒரு புலியோடு ஓநாயும், நரியும்

கூட்டு வைத்துக் கொள்ள தீர்மானித்து

பேச்சு வார்த்தை நடத்தியது.

‘‘மூன்று பேரும் ஒருதாய் மக்களாக

ஒற்றுமையாக இருக்க வேண்டும்!

எந்த இரை கிடைத்தாலும்

அதை பங்கு போட்டு சாப்பிட வேண்டும்'' என்று
ஒப்பந்தம் செய்து கொண்டன.

நமக்கு ஒரு வலிமையான தலைவன்
கிடைத்துவிட்டான் என்று
ஓநாயும், நரியும் ஊளையிட்டு.. ஊளையிட்டு..
தன் மகிழ்ச்சியை காடு முழுவதும் தெரிவித்து வந்தன.

ஒரு நாள் புலிக்கு ஓநாய், நரி மீது சந்தேகம் வந்தது.
"ஒரு மானை வேட்டையாடினால்
அதை எப்படி பங்கு போட்டுக் கொள்வது **?**''
என்று கேட்டது.

அதற்கு ஓநாய்
''புலியே! நீதான் எங்கள் தலைவன்,
அதனால் மானின் தலை உங்களுக்கு,
இந்த நரி, வேகமாக ஓடக்கூடியது..
அதனால் மானின் நான்கு கால்களும்
இந்த நரிக்கு கொடுக்கலாம்.
மீதியிருப்பது உடம்புதான்..
அதை நான் எடுத்துக்கொள்வேன்!" என்றது.
ஓநாயின் சூழ்ச்சியைத் தெரிந்து கொண்ட புலி

ஓநாய் தலையில் ஓங்கி அடித்தது.
ஓநாய் வலி தாங்காமல் ஊளையிட்டது.

‘‘நரியே நீ எப்படி பங்கு போடுவாய்!”
என்று புலி நரியிடம் கேட்டது.
இந்தக் காட்டுக்கே தலைவரான சிங்கத்தை
நாட்டாமையாக வைத்து நாம் பிரித்துக் கொள்ளலாம்”
என்றது நரி.

மூன்று பேரும் சிங்கத்தை அணுகினார்கள்

சிங்கம் மூன்றுபேரும் சொல்வதை கேட்டு
‘‘நாட்டாமைக்கும் ஒரு பாகம் தர வேண்டும்’’
என்ற நிபந்தனையோடு
“நீங்கள் வேட்டையாடிய மானை
இங்கே கொண்டு வந்து போடுங்கள்
நான் பிரித்துக் காட்டுகிறேன்” என்றது.

மற்ற மூன்று பேரும் ஒன்றை ஒன்று பார்த்து
திருதிருவென விழித்தபடி
“இனிமேல்தான் வேட்டையாட வேண்டும்’’ என்று கூறின.
கிடைக்காத ஒன்றுக்காக

இத்தனை போராட்டமா? ஆரவாரமா?

‘‘புலியே! இந்த விலங்குகளின் நயவஞ்சக
பேச்சைக் கேட்டு நீ உன் இனத்தை விட்டு
பிரிந்து வந்தது தப்பு,
உடனே உன் இனத்தோடு சேர்ந்து விடு’’

நாட்டாமையே தீர்ப்பு சொன்ன பிறகு
புலி பதுங்குவதும், தயங்குவதும் ஏன்
என்று தெரியவில்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள்
உலகமே வியக்கும் அளவிற்கு
நிர்வாகத்திறமை உடையவர்கள்.

கனிவையும் கண்டிப்பையும்
இரு கண்களாகக் கொண்டவர்கள்.
தவறு செய்தவர்கள் திருந்தி வந்தால்
மனதார ஏற்றுக் கொள்வார்கள்,

அம்மா எப்படியோ, அதுபோல்

அம்மாவின் பிள்ளைகளாகிய
நாங்களும் நடந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் அம்மாவின் பொற்கால ஆட்சி
நிரந்தரமாக நடைபெற அவர்களுடைய
பிள்ளைகளாகிய நாம் அனைவரும்
ஒன்றிணைந்து, ஆட்சிக்கு துணையாகவும்,
தூணாகவும் இருக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இது அம்மாவின் அரசு!
“மக்களால் நான், மக்களுக்காக நான்”
என்ற அம்மாவின் வேத வாக்கை ஏற்று,
மக்களுக்காக உழைக்கும் அரசு
தமிழ்நாடு நோயில்லா மாநிலமாக உருவாக
உழைத்த ஒரு தாயின் கனவுதான்
இந்த புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி.
மாண்புமிகு அம்மா அவர்களின்
கனவாகவும் நினைவாகவும் மலர்ந்திருக்கின்ற
இந்த மருத்துவக்கல்லூரியை
திறந்து வைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.
இது உங்கள் அரசு

உங்கள் நலன் பேணும் அரசு

எனச் சொல்லி

மணல் குவாரியை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்தார்கள்.

இந்த மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை ஏற்று, அதன் அடிப்படையில் அம்மாவுடைய அரசு மணல் குவாரியை ஏற்று நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு கட்டுமான பணிகளுக்கு தடையின்றி எளிதாக மணல் கிடைக்கும் வகையில் தமிழக அரசால் அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டுவரும் 28 மணல் குவாரிகளிலிருந்து தினசரி சுமார் 5000 லோடு மணல் பொதுப்பணித் துறை மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இன்னும் ஒரு சில நாட்களில் கூடுதல் மணல் குவாரிகளை திறந்து பொதுமக்களுக்கு தங்குதடையின்றி மணல் விநியோகம் செய்யப்படும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மணல் குவாரிகளில் இரண்டு யூனிட் மணல் ரூபாய் 1050 என்ற விலைக்கு விற்கப்படுகிறது. எனவே, யாரேனும் கூடுதல் விலை வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்தால், அவர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, மிகச் சிறப்பாக, மிக அற்புதமாக இந்த விழாவை நடத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து கழக உடன்பிறப்புகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், மருத்துவத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**